Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 305	உள்ளூர் - 03.11.2026	செவ்வாய்க்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 305	வெளியூர் - 04.11.2026	புதன்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

தீபாவளி சிறப்பு ராசிபலன்கள்!

அணுசக்தித் துறையில் 254 ஆசிரியர் பணிகள்!

லஞ்சம்; கைது 18; பறிமுதல் ரூ.1.59 கோடி!

ஆந்திரா, புதுவை: வெளுத்து வாங்கும் மழை!

மகளிருக்கு ரூ.3,000 கோடி நிதி மழை! ஈரோட்டில் விஜய் அதிரடி!!

ஈரோடு, நவ. 03–

ஈரோடு மாவட்டம் காஞ்சிகோயிலில் நடைபெற்ற விழாவில், 26 ஆயிரம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.3,000 கோடி மதிப்பிலான வங்கி நிதியை முதலமைச்சர் விஜய் வழங்கிய தாகத் தகவல் வெளியாகியுள்ளது.



பெண்களின் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்பட்ட இந்த நிதி, சுயதொழில் தொடங்கவும், ஏற்கெனவே நடத்திவரும் தொழில்களை விரிவுபடுத்தவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, கிராமப்புறப் பெண்கள் சிறுதொழில், உணவுப் பொருட்கள் தயாரிப்பு, தையல், கைவினைப் பொருட்கள் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை இந்த வங்கிக் கடனுதவி அதிகரிக்கும். மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடுகளை வலுப்படுத்துவதுடன், குடும்ப வருமானத்தை உயர்த்தவும், பெண்களின் பொருளாதாரத் தற்சார்பை மேம்படுத்தவும் இந்த நிதி பயன்படும் எனக் கருதப்படுகிறது.

மேலும், குழுக்களின் சேமிப்புத் திறன், தொழில் முதலீடு மற்றும் வங்கிகளுடனான நிதித் தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் இத்தகைய கடனுதவிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரே விழாவில் 26 ஆயிரம் மகளிர் குழுக்களுக்கு ரூ.3,000 கோடி வங்கி நிதி வழங்கப்பட்டதாக வெளியான அறிவிப்பு கவனம் பெற்றுள்ளது.

டிரம்ப் ஆட்சிக்கு பேராபத்து?

அமெரிக்காவில் தேர்தல் போர்! நாடாளுமன்றம் கைமாறுமா?

வெற்றி யாருக்கு? உலகமே உற்றுநோக்கல்!!

வாஷிங்டன், நவ. 03–

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் ஆட்சிக்கு மிகப்பெரிய அரசியல் சவாலாகக் கருதப்படும் இடைக்காலத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. குடியரசுக் கட்சிக்கும் ஜனநாயகக் கட்சிக்கும் இடையே கடுமையான போட்டி நிலவுகிறது.



அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் உள்ள 435 இடங்களுக்கும், செனட் சபையில் காலியாகும் 35 இடங்களுக்கும் தேர்தல் நடைபெறுகிறது. பல மாநிலங்களில் ஆளுநர் பதவிகளுக்கும் வாக்குப்பதிவு நடக்கிறது. விலைவாசி உயர்வு, பொருளாதார நிலைமை, வேலைவாய்ப்பு, குடியேற்றக் கொள்கை, வெளியுறவுக் கொள்கை உள்ளிட்ட பிரச்சினைகள் தேர்தலில் முக்கிய விவாதங்களாக உருவெடுத்துள்ளன. டிரம்பின் நிர்வாகச் செயல்பாடுகள் மீதான மக்களின் மதிப்பீடாகவும் இந்தத் தேர்தல் பார்க்கப்படுகிறது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பெரும்பான்மையைத் தக்கவைக்க குடியரசுக் கட்சி தீவிரமாகப் போராடுகிறது. அதேநேரத்தில், டிரம்பின் கொள்கைகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்து நாடாளுமன்றக் கட்டுப்பாட்டைக் கைப்பற்ற ஜனநாயகக் கட்சி முயற்சிக்கிறது.

ஜனநாயகக் கட்சி ஓர் அவையைக் கைப்பற்றினால்கூட டிரம்பின் சட்டத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தடைகள் ஏற்படலாம். அரசின் செலவினங்கள், வரிவிதிப்பு மற்றும் முக்கிய கொள்கை முடிவுகளிலும் எதிர்க்கட்சியின் செல்வாக்கு அதிகரிக்கும். மறுபுறம், குடியரசுக் கட்சி பெரும்பான்மையைத் தக்கவைத்தால் டிரம்பின் அரசியல் செல்வாக்கு மேலும் வலுப்பெறும்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான அமெரிக்க அரசியலின் திசையைத் தீர்மானிக்கும் இந்தத் தேர்தல் முடிவுகளை உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகமா? 96 குடியிருப்புகளை இடிக்க டெண்டர்!

சென்னை, நவ. 03–

சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு மீண்டும் எழுந்துள்ளது.



முதல்வர் விஜய் தலைமையிலான தமிழக அரசு, பட்டினப்பாக்கத்தில் ரூ.1,200 கோடி மதிப்பில், 25 ஏக்கர் பரப்பளவில் புதிய தலைமைச் செயலகம் மற்றும் சட்டப்பேரவை வளாகம் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், தற்போது 3.82 ஏக்கரில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 96 பழைய குடியிருப்புகளை இடிக்க டெண்டர் கோரப்பட்டுள்ளது. டிசம்பர் 1 காலை 11 மணி வரை விண்ணப்பிக்கலாம்.

இதனால் பட்டினப்பாக்கத்திலேயே புதிய தலைமைச் செயலகம் அமையுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இருப்பினும், குடியிருப்புகள் அகற்றப்படுவது தலைமைச் செயலகத் திட்டத்திற்காகத்தான் என்பது அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

புற்றுநோய் மருந்துகள் விலை 93% வரை சரிவு!



புதுடெல்லி. நவ. 03–

புற்றுநோயாளிகளின் மருத்துவச் செலவைக் குறைக்கும் வகையில், 543 பிராண்டு மருந்து களின் அதிகபட்ச சில்லறை விலை குறைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. புதிய விலைகள் நவம்பர் 9 முதல் அமலுக்கு வரவுள்ளதாகக் கூறப்படுகிறது. மார்பகப் புற்றுநோய்க்கான பால்போசிக்லிப் மருந்தின் விலை ரூ.40,421–லிருந்து ரூ.2,720 ஆகவும், தியோடெபா ஊசி மருந்தின் விலை ரூ.80,072–லிருந்து ரூ.7,150 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையால் புற்றுநோயாளிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.2,500 கோடி முதல் ரூ.3,500 கோடி வரை சேமிப்புகிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

டெல்லியில் காற்று மாசு அதிகரிப்பு - வாகனங்கள் தடுத்து நிறுத்தம்; மேம்படுத்தப்பட்ட 2-வது கட்ட செயல் திட்டம் அமல்!

புதுடெல்லி, நவ. 03–

டெல்லியில் காற்றின் தரம் மிகவும் மோசமான பிரிவுக்கு சென்றுள்ளது. கடந்த 31–ந் தேதி 117 ஆக இருந்த காற்றின் தரக்குறியீடு, நேற்று முன்தினம் 261 ஆக உயர்ந்தது. இந்த நிலையில் மேலும் அதிகரித்து 324 ஆனது. டெல்லியில் காற்று மாசு அதிகரித்துள்ள சூழலில், மேம்படுத்தப்பட்ட 2–வது கட்ட செயல் திட்டம் அமல்படுத்தப்பட்டு உள்ளது. இந்த செயல்திட்டம், அத்தியாவசிய தேவையின்றி ஜெனரேட்டர்கள் இயக்குவதை தடை செய்கிறது.



அதுபோல விறகு அடுப்பு, நிலக்கரி அடுப்புகள் பயன்படுத்துவதையும் தடுக்கிறது. கட்டுமான பணிகள், வாகனங்களுக்கான மாசு கட்டுப்பாட்டு சான்றிதழ் போன்றவற்றுக்கு உள்ள கட்டுப்பாடுகள் அப்படியே தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதேபோன்று, சிங்கு எல்லையில், பி.எஸ்.6 தர நிர்ணயத்திற்கு உட்படாத வாகனங்களை நிறுத்தி, திருப்பி அனுப்பும் பணியும் நடந்து வருகிறது. இதில், 1–ந்தேதி மட்டும் 7,279 வாகனங்களை போலீசார் சோதனை செய்தனர். அவற்றில் 714 வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டு உள்ளன.

இந்த பணிக்காக அச்சு, சமூக ஊடகங்களை டெல்லி போலீசார் பயன்படுத்தி வருவதுடன், டெல்லி எல்லையில் எச்சரிக்கை பலகைகளும் வைக்கப்பட்டு உள்ளன. துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

முதல்வர் விஜய் ரோடு ஷோ! வரவேற்பு!!


கோவை, நவ. 03–

கோவை விமான நிலையத்திலிருந்து சாலை வழியாக பெருந்துறைக்கு முதல்வர் ச. ஜோசப் விஜய் புறப்பட்டார்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை அடுத்த காஞ்சிக்கோவில் பிரிவு அருகேயுள்ள ஸ்ரீ லட்சுமி நாராயணா திருமண மண்டபத்தில் அரசுத் திட்டங்களை முதல்வர் விஜய் தொடக்கி வைக்கவுள்ளார்.

இதற்காக சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் கோவை விமான நிலையத்துக்கு வருகை தந்த முதல்வர், சாலை வழியாக பெருந்துறைக்கு புறப்பட்டுள்ளார்.

தேசிய நெடுஞ்சாலையில் அவினாசி, பெருமாநல்லூர், விஜயமங்கலம் சென்று, சுங்கச் சாவடி, சிப்காட் நுழைவாயில், பெருந்துறை புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், குன்னத்தூர் நான்கு சாலை, அண்ணா சிலை வழியாக விழா நடைபெறும் மண்டபத்துக்கு முதல்வர் செல்கிறார்.



பெருந்துறை, விஜயமங்கலம் சுங்கச்சாவடி முதல் விழா நடைபெறும் இடம் வரை சாலையின் இருபுறமும் பொதுமக்கள் முதல்வரை காணும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள துடன், இரும்புத் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவி உள்பட ரூ. 1,100 கோடியில் சுமார் 5 ஆயிரம் பேருக்கு நலத் திட்ட உதவிகளை வழங்க உள்ளார். மேலும், ஈரோடு மாவட்டத்தில் முடிவுற்ற பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளையும் அவர் தொடங்கிவைக்கிறார்.

உக்ரைன் மீது ரஷியா தாக்குதல் - 26 பேர் பலி!

கீவ், நவ. 03–

உக்ரைன் மீது ரஷியா நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர்.

உக்ரைன் , ரஷியா போர் 4 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றன. அதேவேளை, பேச்சுவார்த்தை மூலம் போரை நிறுத்த இந்தியா, சீனா உள்பட பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. ஆனாலும், இரு நாடுகளுக்கும் இடையே போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில், உக்ரைனின் தெற்கு சபோரிஜியா மாகாணம் கொம்ஷவாக் கிராமத்தில் நிவாரண பொருட்கள் விநியோக மையம் மீது ரஷியா நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்த ஏவுகணை தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். மேலும், 5 பேர் படுகாயமடைந்தனர்.



ஐரோப்பாவின் 7 நாடுகளில் சைபர் தாக்குதல்: சூப்பர் மார்க்கெட்டுகள் முடக்கம்!

பிரஸ்ஸல்ஸ், நவ. 03–

ஐரோப்பாவின் பெல்ஜியம், ஸ்வீடன், லக்சம்பர்க், அயர்லாந்து, நெதர்லாந்து, பின்லாந்து, எஸ்டோனியா உள்ளிட்ட 7 நாடுகளில் சூப்பர்மார்க்கெட் குளிர்சாதனப் பெட்டிகள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.



ஹேக்கர்கள் ஃப்ரீசர்களின் வெப்பநிலையை 50 டிகிரி செல்சியஸ் வரை உயர்த்தியதாகக் கூறப்படுகிறது. பெல்ஜியம், லக்சம்பர்க்கில் மட்டும் 40 சூப்பர்மார்க்கெட்டுகள் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் குளிர்சாதனப் பெட்டிகளில் சேமிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் கெட்டுப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் 6 ராணுவத் தளங்களிலும் ஃப்ரீசர்கள் செயலிழந்ததாகத் தகவல் வெளியாகியுள்ள நிலையில், அதற்கும் சைபர் தாக்குதலுக்கும் தொடர்பு உள்ளதா என்பது உறுதியாகவில்லை.

இந்தச் சம்பவங்கள் உணவுப் பாதுகாப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு குறித்த கவலையை அதிகரித்துள்ளன.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 03.11.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஐப்பசி மாதம் 17-ம் தேதி

அரசியல் மாநாடுகளா? மக்களின் வாழ்வாதாரத்திற்கு வேட்டா?



மேடையில் முழக்கம்! வீதியில் முடக்கம்!
வியாபாரிகளுக்கு நஷ்டம்!

ஜனநாயக நாட்டில் அரசியல் கட்சிகள் மாநாடுகள் நடத்துவதும், போராட்டங்களில் ஈடுபடுவதும் அடிப்படை உரிமை. ஆனால், அந்த உரிமையால் சாதாரண மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதை ஏற்க முடியாது.

டெல்லியில் 'இண்டி' கூட்டணி நடத்திய பொதுக்கூட்டத்தால் போக்குவரத்து முடங்கி, 2.50 லட்சம் கடைகள் மூடப்பட்டதாகவும், 25 முக்கிய சந்தைகள் பாதிக்கப்பட்டதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். ஒரே நாளில் ரூ.11,000 கோடி அளவுக்கு வர்த்தகம் பாதிக்கப்பட்டதாக வர்த்தகர்கள் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

தலைவர்களுக்கு மாநாடு அரசியல் பலம்; சிறு வியாபாரிகளுக்கோ ஒருநாள் வருமான இழப்பு!

கடையைத் திறக்க முடியாத வியாபாரியின் வாடகையை யார் செலுத்துவார்கள்? அன்றாடக் கூலியை நம்பியுள்ள தொழிலாளியின் குடும்பத்திற்கு யார் உணவளிப்பார்கள்? பண்டிகைக் கால வியாபாரத்தை முடக்குவது எந்த வகையில் நியாயம்?


இது ஒரு கூட்டணிக்கு மட்டுமான விமர்சனமல்ல. ஆளுங்கட்சியோ, எதிர்க்கட்சியோ எந்தக் கட்சியாக இருந்தாலும் மக்களின் இயல்பு வாழ்க்கையை முடக்கக் கூடாது.

பெரிய அரசியல் மாநாடுகளை நகரின் முக்கிய வணிகப் பகுதிகளுக்கு வெளியே நடத்த வேண்டும். போக்குவரத்து, வியாபாரம், அவசர மருத்துவச் சேவைகள் பாதிக்கப்படாத வகையில் அரசு அனுமதி வழங்க வேண்டும்.

மக்களுக்காக அரசியல் நடத்துவதாகக் கூறும் தலைவர்கள், முதலில் மக்களின் வாழ்வாதாரத்தை மதிக்க வேண்டும்!

மேடையில் லட்சக்கணக்கானோர் திரள்வது வெற்றியல்ல; அந்த மாநாட்டால் ஓர் ஏழையின் அடுப்பு அணையாமல் இருப்பதே உண்மையான அரசியல் வெற்றி!

ஆசிரியர்,
மதுரை மணி நாளிதழ்



சினிமா துளிகள்..!

ரிலையன்ஸ் குழுமத்துடன் மீண்டும் கூட்டணி - பிஸ்கட் விளம்பரத்தில் அஜித்...!



ரிலையன்ஸ் நிறுவனத்தின், 'இன்டிபெண்டன்ஸ் பவர் அப்' பிஸ்கட்டுடன் மீண்டும் அஜித்குமார் அணி கூட்டணி வைத்துள்ளதாக அக்குழுமம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

பொதுவாகவே விளம்பர வெளிச்சத்தில் இருந்து விலகியிருப்பவர் நடிகர் அஜித்குமார். அதற்காகவே, அவரதுமீது ரசிகர்கள் தனி மதிப்பு வைத்துள்ளனர். ஆனால் சமீப நாட்களாக தனது 'அஜித்குமார் ரேஸிங் அணி'யின் சார்பாக, முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து விளம்பரங்களில் நடித்து வருகிறார்.

யன்ஸ் நிறுவனத்தின் 'கேம்பா எனர்ஜி', அஜித்குமார் கார் பந்தய அணியின் அதிகாரப்பூர்வ எனர்ஜி பார்ட்னராக செயல்படுகிறது. இதனால் இந்த கூல்ட்ரிங்க்ஸ் விளம்பரத்தில் அஜித்குமார் நடித்திருந்தார்.

ஆனால் நடிகர் அஜித்தின் இந்த தோற்றம் அவரது ரசிகர்களுக்கு பெரும்பாலும் மகிழ்ச்சியை அளிக்கவில்லை. இந்த விளம்பரத்தில் நடித்ததற்காக அவரது ரசிகர்களாலேயே ட்ரோல் செய்யப்பட்டார்.

இந்நிலையில் ரிலையன்ஸ் குழுமத்தின் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின், 'இன்டிபெண்டன்ஸ் பவர் அப்' பிஸ்கட்டுடன் மீண்டும் அஜித்குமார் அணி கூட்டணி வைத்துள்ளதாக அக்குழுமம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இதன்மூலம் இந்த பிஸ்கட்டின் விளம்பர முகமாக அஜித் இடம்பெற்றுள்ளார்.

இந்த பிராண்டின் பேரில் 9 பிஸ்கட் வகைகளை தமிழ்நாட்டில் ரிலையன்ஸ் அறிமுகப்படுத்துகிறது. பவர் அப், மில்கி பவர், பட்டர் பிளிஸ், மேரி ப்ரைம், குளுக்கோஸ் பூஸ்ட், கோகோ, க்ரெம்யம் ஆரஞ்ச், க்ரெம்யம் சாக்கோ, கோகோ பர்பன் என ஒன்பது வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ரூ.5லிருந்து ரூ.125 என பல வடிவங்களில் இந்த பிஸ்கட்டுகள் கிடைக்கின்றன.

டாஸ்மாக் மேற்பார்வையாளர்கள் 1,729 பேருக்கு நோட்டீஸ்!

சென்னை, நவ. 03–

தமிழகத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 51 டாஸ்மாக் கடைகள் செயல்பட்டு வருகிறது. டாஸ்மாக் கடைகளில் காலி மதுபாட்டில்களுக்கு ரூ.10 திரும்ப கொடுக்கும் திட்டத்தை டாஸ்மாக் நிர்வாகம் அறிமுகப்படுத்தியது. இந்த திட்டத்திற்கு டாஸ்மாக் ஊழியர்கள் எதிர்ப்பு தெரி வித்தனர்.



போதிய இடவசதி, அதிகம் விற்பனையாகும் கடைகளுக்கு கூடுதல் சிரமம், ஸ்கேனர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை என ஊழியர்கள் குற்றம் சாட்டினர். காலிபாட்டில்களை சேகரிக்கும் பணியை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க வேண்டும், தானியங்கி பாட்டில் சேகரிப்பு எந்திரங்களை நிறுவ வேண்டும், கூடுதல் பணியாளர்களை நியமிக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை ஊழியர்கள் முன்வைத்தனர்.

இந்தநிலையில், காலிமதுபாட்டில்களை திரும்பப் பெற்று ரூ.10 வழங்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் தமிழகம் முழுவதும் பல இடங்களில் டாஸ்மாக் ஊழியர்கள் கடைகளை அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேபோல் டாஸ்மாக் போராட்டக்குழுவினருடன் நடந்த பேச்சு வார்த்தையும் தோல்வியில் முடிந்தது. முதல் நாள் கடைகளை அடைத்ததால் ரூ.150 கோடி வரையில் வருவாய் இழப்பு ஏற் பட்டதாக டாஸ்மாக் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், நேற்று முன்தினம் கடைகளை மூடி போராட்டத்தில் ஈடுபட்ட 960 பேருக்கு டாஸ்மாக் நிர்வாகம் விளக்கம் கேட்டு 'மெமோ' அனுப்பியுள்ளது. இதில் 360 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக டாஸ்மாக் தொழிற்சங்க தலைவர் ஒருவர் தெரிவித்தார். நேற்று 2–வது நாளாக டாஸ்மாக் கடைகளை மூடி ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சென்னையின் உள்புற பகுதிகளில் பெரும்பாலான கடைகள் நேற்று மதியம் மூடப்பட்டிருந்தன.

இந்த நிலையில், டாஸ்மாக் கடையை திறக்காமல் போராட்டம் நடத்தியது தொடர்பாக விளக்கம் அளிக்கக் கோரி 1,729 மேற்பார்வையாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகை! சிங்கப்பூர், கோலாலம்பூரிலிருந்து திருச்சிக்கு சிறப்பு விமானங்கள்!

புதுடெல்லி, நவ. 03–

தீபாவளி பண்டிகைய முன்னிட்டு ஏர் ஏசியா மற்றும் ஸ்கூட் விமான நிறுவனங்கள் சார்பில் சிங்கப்பூர், கோலாலம்பூரில் இருந்து திருச்சிக்கு சிறப்பு விமானங்களை இயக்குகிறது.

ஸ்கூட் விமான நிறுவனம் சார்பில் ஏற்கெனவே திருச்சி–சிங்கப்பூர் இடையே தினசரி விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நவம்பர் 3 மற்றும் 15–ஆகிய தேதிகளில் சிங்கப்பூர்–திருச்சி இடையே இருவழி மார்க்கங்களிலும் கூடுதலாக ஒரு விமானம் இயக்கப்பட வுள்ளது. அந்த சிறப்பு சேவையில் நவம்பர் 3–ஆம் தேதி 7.05 மணிக்கு



சிங்கப்பூரில் இருந்து திருச்சி வரும் விமானம், 8.05 மணிக்கு திருச்சியில் இருந்து சிங்கப்பூருக்கு புறப்படும். நவம்பர் 15–ஆம் தேதி இரவு 11.40 மணிக்கு சிங்கப்பூரில் இருந்து திருச்சிக்கு வரும் விமானம், நவம்பர் 16–ஆம் அதிகாலை 12.40 மணிக்கு திருச்சியில் இருந்து சிங்கப்பூருக்கு புறப்படும்.

ஏர் ஏசியா விமான நிறுவனம் சார்பில் திருச்சியில் இருந்து கோலாலம்பூருக்கு தினசரி ஒரு விமான சேவையை வழங்கி வருகிறது. தீபாவளியை முன்னிட்டு நவம்பர் 6 முதல் 12–ஆம் தேதி வரை திருச்சி – கோலாலம்பூர் இடையே இருவழி மார்க்கங்களிலும் கூடுதலாக ஒரு விமான சேவையை வழங்க உள்ளது. நவம்பர் 6 முதல் 12–ஆம் தேதி வரை திருச்சியில் இருந்து கோலாலம்பூருக்கு ஏர் ஏசியா விமானம் இரவு 10.30 மணிக்கும், அதிகாலை 12.40 மணிக்கும் என இரண்டு விமானங்கள் இயக்கப்படவுள்ளதாக விமான நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

எவரெஸ்ட் அடிவாரத்தில் இரு ஹெலிகாப்டர்கள் மோதி விபத்து!

நேபாளம், நவ. 03–

நேபாளத்தில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தின் அடிவாரத்தில் இரு ஹெலிகாப்டர்கள் மோதி விபத்துக்குள்ளானது. இந்த ஹெலிகாப்டரில் விபத்தில் பலியானவர் இந்திய சுற்றுலாப் பயணி என அடையாளம் காணப்பட்டு ள்ளது. எவரெஸ்ட் சிகரப் பகுதியில் உள்ள பெரிச்சே என்ற இடத்தில் இன்று காலை 8 மணியளவில் தரையிறங்க முயன்ற ஃபிஷ் டெயில் ஏர் மற்றும் டைனாஸ்டி ஏர் ஆகிய இரு தனியார் நிறுவனங்களின் ஹெலிகாப்டர்கள் ஒன்றோடு ஒன்று



மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஃபிஷ்டெயில் ஏர் ஹெலிகாப்டரில் பயணித்த வெளிநாட்டுப் பயணி உயிரிழந்தார். இரு ஹெலிகாப்டர்களின் கேப்டன்க ளான கே.சி. பிரஜ்வல், ரவீந்திர பிரஜாபதி, நியூசிலாந்தைச் சேர்ந்த இந்திய வம்சாவளி ஒருவர் என மூவர் காயமடைந்துள்ளார்.

உயிரிழந்த வெளிநாட்டுப் பயணி, இந்தியாவைச் சேர்ந்த வசந்தகுமார் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. அவரின் உடல் லுக்லாவில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேலும், சம்பவ இடத்துக்கு விரைந்துள்ள சிம்ரிக் ஏர் ஹெலிகாப்டர் மூலம் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சொத்துக்குவிப்பு வழக்கு: சி.விஜயபாஸ்கருக்கு அமலாக்கத்துறை சம்மன்!

சென்னை, நவ. 03–

சொத்துக்குவிப்பு வழக்கில் முன்னாள் அமைச்சர் சி. விஜயபாஸ்கர், அவரது மனைவி ரம்யா ஆகியோருக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது.

2016 முதல் 2021–ஆம் ஆண்டுவரை சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த விராலிமலை தொகுதி எம். எல்.ஏ.வான சி. விஜயாஸ்கர், வருமானத்திற்கு அதிகமாக ரூ. 35.79 கோடி சொத்து சேர்த்ததாகக் கூறி, 2021–இல் லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்தது.

லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்ததைத் தொடர்ந்து அமலாக்கத்துறை பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் விசார ணையைத் தொடங்கியது.

இதன் ஒரு பகுதியாக, கடந்த மார்ச் 21–ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் உள்ள விஜயபாஸ்கரின் இல்லத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. நிகழாண்டு



தொடக்கத்தில் விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவிக்கு சம்மன் அனுப்பப்பட்டு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்கில் விசாரணைக்காக, தம்பதியரில் ஒருவர் இந்த வெள்ளிக்கிழமை சென்னை மண்டல அலுவலகத்தில் ஆஜராக வேண்டும் என்றும், மற்றொருவர் அடுத்த வாரம் விசாரணைக்கு வர வேண்டும் என்றும் அமலாக்கத்துறை உத்தரவிட்டுள்ளது.

தங்கம் விலை உயர்வு!



சென்னை, நவ. 03–

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை (நவ. 3) சவரனுக்கு ரூ. 200 அதிகரித்து ஒரு சவரன் ரூ. 1,02,400–க்கும் கிராமுக்கு ரூ. 25 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 12,800–க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ. 200–க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 2 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.



கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.பிரசன்னா ராமசாமி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில்,பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்ட விழிப்புணர்வு வாகனத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

கரூர் மாநகராட்சிப் பகுதியில் தரைக்கடை வியாபாரிகளிடம் முறைகேடாகப் பணம் வசூல்: த.வெ.க.வினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தி.மு.க சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு!

கரூர், நவ. 03–

கரூர் மாநகராட்சிப் பகுதிகளில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு தற்காலிகமாகத் தரைக்கடை அமைத்து வியாபாரம் செய்யும் ஏழை வியாபாரிகளிடம் முறைகேடாகப் பணம் வசூலிப்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க கரூர் மத்திய பகுதி கழகப் பொறுப்பாளர் வி.ஜி.எஸ். குமார் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளார்.


கரூர் மாநகராட்சிப் பகுதிகளில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, தரைக்கடை வியாபாரிகள் தற்காலிக மாகத் கடைகள் அமைத்துத் தங்கள் வாழ்வாதாரத்தை ஈட்டி வருகின்றனர். கடந்த ஐந்தாண்டுகளில் இவர்களிடம் எந்தவிதமான கட்டணமோ அல்லது பணமோ வசூல் செய்யப்படவில்லை.

இந்நிலையில், வருகிற 8.11.2026 அன்று வரவிருக்கும் தீபாவளியை




முன்னிட்டு, ஆளுங்கட்சியான த.வெ. கவைச் சேர்ந்தவர்கள் விதிகளுக்குப் புறம்பாக, தற்காலிகத் தரைக்கடை அமைத்து வியாபாரம் செய்யும் பொதுமக்களிடம் மிரட்டல் விடுத்தும் முறைகேடாகவும் தலா ரூ. 3,500 வரை வசூல் செய்து வருவதாகப் புகார்கள் எழுந்துள்ளன.

எனவே, ஏழை எளிய தரைக்கடை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையிலும், விதிகளுக்குப் புறம்பாகவும் பணம் வசூலிக்கும் த.வெ.கவினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பண்டிகைக் காலங்களில் தற்காலிகக் கடை அமைத்து வியாபாரம் செய்யும் பொதுமக்களின் நலனைப் பாதுகாத்து, உரிய பாதுகாப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம் என்று மனு அளித்தனர்.



தீபாவளி சிறப்பு ராசிபலன்கள்!



தீபாவளித் திருநாள் மகிழ்ச்சி, ஒற்றுமை, நம்பிக்கை மற்றும் புதிய தொடக்கங்களின் அடையாளமாகக் கொண்டாடப்படுகிறது. இந்தத் தீபாவளியில் மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிக்காரர்களுக்கும் பாரம்பரிய ஜோதிட நம்பிக்கைகளின்படி பலன்கள் எப்படி அமையும் என்பதைப் பார்ப்போம்.

12 ராசிகளுக்கான சிறப்புப் பலன்கள்

1. மேஷம் முயற்சியில் முன்னேற்றம்!

புதிய முயற்சிகளில் ஆர்வம் அதிகரிக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல வாய்ப்புகள் கிடைக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு | வழிபாடு: முருகன்

2. ரிஷபம் பணவரவுக்கு வாய்ப்பு!

பொருளாதார முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் உருவாகலாம். குடும்ப உறவுகள் வலுப்பெறும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் குறித்து ஆலோசனை நடைபெறும். ஆடம்பரச் செலவுகளில் கவனம் தேவை.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை | வழிபாடு: மகாலட்சுமி

3. மிதுனம் புதிய வாய்ப்புகள் தேடி வரும்!

வேலைவாய்ப்பு மற்றும் தொழில் தொடர்பான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம். நண்பர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் குறித்த பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை | வழிபாடு: பெருமாள்

4. கடகம் குடும்பத்தில் மகிழ்ச்சி!

நீண்டநாள் எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதற்கான சூழல் உருவாகலாம். குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நேரம் செலவிடுவீர்கள். பண விஷயங்களில் நிதானமாக முடிவெடுப்பது நல்லது.

அதிர்ஷ்ட நிறம்: முத்து வெள்ளை | வழிபாடு: அம்மன்

5. சிம்மம் மதிப்பும் மரியாதையும் உயரும்!

பணியிடத்தில் பொறுப்புகள் அதிகரிக்கலாம். தலைமைத்திறனை வெளிப்படுத்த வாய்ப்புகள் அமையும். வியாபாரத்தில் முன்னேற்றத்திற்கான புதிய திட்டங்களைத் தொடங்க ஆர்வம் ஏற்படும்.

அதிர்ஷ்ட நிறம்: தங்க மஞ்சள் | வழிபாடு: சூரிய பகவான்

6. கன்னி உழைப்புக்குப் பலன் கிடைக்கும்!

தொழிலில் நிலவிய சிக்கல்களுக்குத் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்வீர்கள். கல்வி மற்றும் போட்டித் தேர்வுகளில் கவனம் அதிகரிக்கும். உடல்நலத்தில் அக்கறை செலுத்துவது அவசியம்.

அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை | வழிபாடு: விநாயகர்

7. துலாம் செல்வச் செழிப்புக்கு வாய்ப்பு!

குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய தொடர்புகள் கிடைக்கலாம். சொத்து தொடர்பான விஷயங்களில் முன்னேற்றம் ஏற்படலாம். செலவுகளைத் திட்டமிடுவது நல்லது.

அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு | வழிபாடு: மகாலட்சுமி

8. விருச்சிகம் தடைகளைத் தாண்டும் நேரம்!

தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீண்டநாள் முயற்சிகளில் சாதகமான மாற்றங்கள் ஏற்படலாம். குடும்பப் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும்.

அதிர்ஷ்ட நிறம்: அடர்சிவப்பு | வழிபாடு: முருகன்

9. தனுசு நல்ல செய்தி தேடி வரும்!

வேலை மற்றும் கல்வி தொடர்பான முயற்சிகளில் நம்பிக்கை அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் குறித்த ஆலோசனைகள் நடைபெறலாம். புதிய முதலீடுகளில் கவனமாகச் செயல்படவும்.

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள் | வழிபாடு: தட்சிணாமூர்த்தி

10. மகரம் தொழிலில் வளர்ச்சி!

கடின உழைப்பின் மூலம் முன்னேற்றம் காண்பீர்கள். பணியிடத்தில் புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். குடும்பத்தினரின் ஆதரவு உற்சாகத்தை அளிக்கும். கடன் மற்றும் செலவு விஷயங்களில் கவனம் தேவை.

அதிர்ஷ்ட நிறம்: நீலம் | வழிபாடு: சனீஸ்வரர்

11. கும்பம் புதிய பாதை திறக்கும்!


புதிய தொழில் வாய்ப்புகள் குறித்து சிந்திப்பீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும் என்பதால் சேமிப்பில் கவனம் செலுத்தவும்.

அதிர்ஷ்ட நிறம்: கருநீலம் | வழிபாடு: ஆஞ்சநேயர்

12. மீனம் மகிழ்ச்சியான மாற்றங்கள்!

குடும்பத்தில் அமைதி நிலவும். தொழிலில் புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் ஆர்வம் ஏற்படும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். திட்டமிட்ட செயல்பாடுகள் நல்ல முன்னேற்றத்திற்கு உதவும்.

அதிர்ஷ்ட நிறம்: பொன்மஞ்சள் | வழிபாடு: பெருமாள்



01.11.2026 முதல் பழனி மலையில் தங்கரதம் இழுத்து வழிபட இனி ரூ.2,500 கட்டணம்

திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோவிலில் தங்கரதம் இழுத்து வழிபடும் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.



கர்ப்பிணிப் பெண்கள் கவனத்திற்கு!



தாயும் சேயும் ஆரோக்கியமாக இருக்க 12 முக்கிய மருத்துவக் குறிப்புகள்!

கர்ப்பகாலம் என்பது பெண்களின் வாழ்க்கையில் மிக முக்கியமான காலகட்டமாகும். இந்த நேரத்தில் சத்தான உணவு, போதுமான ஓய்வு, முறையான மருத்துவப் பரிசோதனை ஆகியவை தாய் மற்றும் குழந்தையின் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியம்.

1. சத்தான உணவு அவசியம்

கீரைகள், காய்கறிகள், பழங்கள், பருப்பு வகைகள், முழுதானியங்கள், பால் மற்றும் நன்கு சமைத்த முட்டை போன்ற உணவுகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

2. போதுமான தண்ணீர் குடிக்கவும்

உடலில் நீர்ச்சத்து குறையாமல் இருக்கத் தேவையான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். வெயில் மற்றும் உடற்பயிற்சியின்போது கூடுதல் கவனம் தேவை.

3. தினமும் மெதுவாக நடக்கவும்

மருத்துவர் அனுமதித்தால் நடைப்பயிற்சி போன்ற மிதமான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம். கர்ப்பகாலச் சிக்கல்கள் இருப்பவர்கள் தனிப்பட்ட ஆலோசனை பெற வேண்டும்.

4. போதுமான தூக்கம் தேவை

தினமும் 79 மணி நேரம் தூங்க முயற்சிக்கவும். கர்ப்பத்தின் பிற்பகுதியில் பக்கவாட்டில் படுப்பது பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும் கவனிக்க வேண்டியவை:

5. இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம்: மருத்துவர் பரிந்துரைக்கும் மாத்திரைகளைத் தவறாமல் எடுத்துக்கொள்ள வேண்டும்.

6. கால்சியம்: குழந்தையின் எலும்பு வளர்ச்சிக்குத் தேவையான கால்சியம் மற்றும் வைட்டமின் டி போதுமான அளவில் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

7. மருத்துவப் பரிசோதனை: ரத்த அழுத்தம், ரத்தசோகை, சர்க்கரை அளவு மற்றும் குழந்தையின் வளர்ச்சியை முறையாகப் பரிசோதிக்க வேண்டும்.

8. உணவுப் பாதுகாப்பு: பச்சை அல்லது சரியாக வேகாத இறைச்சி, மீன், முட்டை மற்றும் பதப்படுத்தப்படாத பால் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

9. மனநலம்: மன அழுத்தத்தைக் குறைக்க குடும்பத்தினருடன் பேசவும். தொடர்ச்சியான கவலை அல்லது மனச்சோர்வு இருந்தால் மருத்துவ உதவி பெறவும்.

10. புகை மற்றும் மது வேண்டாம்: புகைப்பிடித்தல், மதுபானம் மற்றும் போதைப்பொருட்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

11. மருந்துகளில் கவனம்: மருத்துவர் ஆலோசனையின்றி வலி நிவாரணிகள், மூலிகை மருந்துகள் அல்லது பிற மாத்திரைகளை எடுத்துக்கொள்ளக் கூடாது.


12. குழந்தையின் அசைவைக் கவனிக்கவும்: வழக்கத்தைவிட குழந்தையின் அசைவு குறைந்தால் உடனடியாக மருத்துவமனையை அணுக வேண்டும்.

கர்ப்பிணிகள் அறிந்திருக்க வேண்டிய அபாய அறிகுறிகள்

கடுமையான தலைவலி, பார்வை மங்குதல், அதிக ரத்தப்போக்கு, கடுமையான வயிற்றுவலி, மூச்சுத்திணறல், வலிப்பு அல்லது குழந்தையின் அசைவு குறைதல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் தாமதிக்காமல் அவசர மருத்துவ உதவி பெற வேண்டும்.

மருத்துவ அறிவுரை: ஒவ்வொரு கர்ப்பமும் வேறுபட்டது. எனவே உணவு, உடற்பயிற்சி, மருந்துகள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் தொடர்பாக மகப்பேறு மருத்துவரின் ஆலோசனையைப் பின்பற்றுவது அவசியம்.

அம்பையில் அனல் பறக்கும் இடைத்தேர்தல்!



திருநெல்வேலி, நவ. 03–

அம்பாசமுத்திரம் தொகுதியில் அதிமுக எம்.எல்.ஏ. இசக்கி சுப்பையா பதவி விலகி தவெக-வில் இணைந்ததால் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. தவெக சார்பில் அவரே மீண்டும் போட்டியிடுவார் எனக் கூறப்படுகிறது.

திமுக சார்பில் பிரபாகரன், ரவீந்திரநாத் பெயர்கள் பரிசீலனையில் உள்ளன. அதிமுகவில் இணைந்த ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரி வெள்ளத்துரைக்கு வாய்ப்பு வழங்கப்படலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

நாம் தமிழர் கட்சி சார்பில் சீமான் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார். நவம்பர் 14–ல் முதல்வர் விஜய் வருகை தரவுள்ளதால் அம்பாசமுத்திரம் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது!

இந்தியா கூட்டணி போராட்டத்தால் 2.50 லட்சம் கடைகள் அடைப்பு, ரூ. 11,000 கோடி இழப்பு!



புதுடெல்லி, நவ. 03–

தில்லியில் இந்தியா கூட்டணியினர் நடத்திய போராட்டத்தால் ரூ. 11,000 இழப்பு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர் சங்கத்தினர் கவலை தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) மூலம் பாஜகவுக்கு சாதகமாக தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி, ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டுமென இந்தியா கூட்டணி சார்பில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (நவ. 1), தில்லியில் பிரம்மாண்ட பேரணி, பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தப் பேரணியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பொதுச் செயலர் பிரியங்கா காந்தி, சமாஜவாதி தலைவர் அகிலேஷ் யாதவ், திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் எம்.ஏ.பேபி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் டி.ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்), லிபரேஷன் கட்சி பொதுச் செயலர் தீபாங்கர் பட்டாச்சார்யா, தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஃபரூக் அப்துல்லா, மக்கள் ஜனநாயக கட்சித் தலைவர் மெஹபூபா முஃப்தி உள்ளிட்ட இண்டி கூட்டணி தலைவர்கள், கார்கே இல்லத்தில் இருந்து திறந்த வாகனங்களில் மின்டோ சாலை – கன்னாட் பிளேஸ் சந்திப்பை சென்றடைந்தனர்.

கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், கன்னாட் பிளேஸ் பகுதியில் இருந்து ராம்லீலா மைதானத்துக்கு பேரணியாக சென்றதை அடுத்து ராம்லீலா மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.


இந்தியா கூட்டணியினர் நடத்திய போராட்டத்தால் பாதுகாப்பு கருதி 2.50 லட்சத்துக்கும் அதிகமான கடைகள் அடைக்கப்பட்டன.

ராம்லீலா மைதானத்தில் இருந்து 5 கி.மீ. சுற்றளவில் காஷ்மீரி கேட், மோரி கேட், சாந்தினி சௌக், சாவ்ரி பஜார், காரி பாவோலி, நயா பஜார், சதர் பஜார், அஜ்மேரி கேட், தர்யாகஞ்ச், கமலாஸ் மார்க்கெட், ஜமாஸ் மார்க்கெட், பஹர்கஞ்ச், லஜ்பத் ராய் மார்க்கெட், கினாரி பஜார், தரியா கலன், பல்லிமாறன், ஃபதேபுரி, திலக் பஜார், கனாட் பிளேஸ், பாலிகா பஜார், கஃபர் மார்க்கெட் மற்றும் கரோல் பாக் உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் கடைகள் அடைக்கப்பட்டன.

நாடு முழுவதும் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்றான தீபாவளிப் பண்டிகைக்கு வியாபாரம் சூடுபிடிக்கும் நிலையில், இந்தியா கூட்டணியினரின் போராட்டத்தால் சுமார் ரூ.10,000 முதல் 11,000 கோடி வரை இழப்பு ஏற்பட்டதாக தில்லி வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனத்தின் தலைவர் பிரிஜேஷ் கோயல் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிரிஜேஷ் கோயல் பேசுகையில், "பேரணி நடைபெறும் இடத்திற்கு அருகிலுள்ள சுமார் 20 முதல் 25 முக்கிய வியாபாரம் நடைபெறும் சந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 3 லட்சம் கடைகளில் கிட்டத்தட்ட 2,50,000 கடைகள் மூடப்பட்டன. இதற்கெல்லாம் யார் பொறுப்பேற்பது?" என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மணிக்கு 120 கி.மீ. வேகம்... தீவிர புயலாக கரையைக் கடந்த 'முரசு'!



சென்னை, நவ.03–

தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் உருவான முரசு புயல், வடமேற்கு திசையில் நகர்ந்து தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் நெல்லூர் மற்றும் நரசாப்பூர் இடையே, ஒங்கோலுக்கு தெற்கே தீவிர புயலாக இன்று (நவ. 3) அதிகாலை கரையைக் கடந்ததாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருப்பதாவது: தீவிர புயலான 'முரசு' நவ 3 காலை 3:30 மணி முதல் 5:30 மணிக்குள் (இந்திய நேரப்படி) தெற்கு ஆந்திரப் பிரதேச கடற்கரையில், ஒங்கோலுக்கு அருகில் கரையைக் கடந்தது.

அப்போது காற்றின் வேகம் மணிக்கு 100 கி.மீ. முதல் 110 கி.மீ. வரையிலும், அவ்வப்போது 120 கி.மீ. வேகத்திலும் இருந்தது.

நவ. 3 காலை 5:30 மணி நிலவரப்படி, இந்தப் புயல் தெற்கு ஆந்திரப் பிரதேச கடற்கரைப் பகுதியில், ஒங்கோலுக்கு அருகில் மையம் கொண்டு இருக்கிறது.

இது பாபட்லாவிலிருந்து (ஆந்திரப் பிரதேசம்) தென்மேற்கே சுமார் 40 கி.மீ. தொலைவிலும், காவலியிலிருந்து (ஆந்திரப் பிரதேசம்) வடக்கு–வடகிழக்கே 80 கி.மீ. தொலைவிலும், மசூலிப்பட்டினத்திலிருந்து (ஆந்திரப் பிரதேசம்) மேற்கு–தென்மேற்கே 120 கி.மீ. தொலைவிலும், நெல்லூரிலிருந்து (ஆந்திரப் பிரதேசம்) வடக்கே 130 கி.மீ. தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.

இது, தொடர்ந்து வடக்கு–வடமேற்கு திசையில் நகரும் என்றும், இன்று நண்பகலுக்குள் படிப்படியாக புயலாக வலுவிழந்து, இன்று நள்ளிரவுக்குள் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர் ஈபி சரவணன் சார்பில் தீபாவளி திருநாள் உதவிகள் வழங்கும் விழா!



திருப்பூர், நவ. 03–


திருப்பூர் போயம்பாளையத்தில் சமூக ஆர்வலர் ஈ.பி.அ.சரவணன் சோசியல் வெல்பர் டிரஸ்ட் சார்பில் 13–ஆம் ஆண்டு தீபாவளி விழா பிரம்மாண்டமாக நடைபெற்றது.

சமூக ஆர்வலரும் டிரஸ்ட் தலைவருமான ஈ.பி.அ.சரவணன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், 250–க்கும் மேற்பட்ட எளிய மக்களுக்குத் தீபாவளி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன திருப்பூர், அவினாசி, காங்கேயம், பல்லடம், உடுமலை, ஈரோடு, சேலம் உள்ளிட்ட பல மாவட்டங்களிலிருந்து கடந்த ஒரு மாதமாகத் திட்டமிட்டுத் தேர்வு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகள், தூய்மைப் பணியாளர்கள், திருநங்கைகள் மற்றும் மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் ஆகியோருக்கு இந்த உதவிகள் நேரடியாக வழங்கப்பட்டன.நெஞ்சை நெகிழ வைத்த பரிசுகள்:புத்தாடைகள், இனிப்புகள், மற்றும் சிறப்பு போனஸ் ரொக்கம் வழங்கப்பட்டது.சிவகாசி தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில், டிரஸ்ட் நிர்வாகிகள் நேரடியாகச் சிவகாசிக்கே சென்று ஆய்வு செய்து வாங்கிய தரமான பட்டாசு பெட்டகங்கள் வழங்கப்பட்டன.

மின் விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் விளிம்புநிலை மக்களுக்கும் இந்த விழா பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

நல்லூர் நுகர்வோர் மன்றத் தலைவர் சண்முக சுந்தரம், மாமன்ற உறுப்பினர் விஜயகுமார், பிளையர்ஸ் உரிமையாளர் பிரகாஷ், இராதாகிருஷ்ணன், பல்லடம் மணிக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.மேலும், சங்க நிர்வாகிகள் சின்னத்துரை, வெள்ளையப்பன், நாகராஜன், ராஜசெல்வம், கருணாகரன், சுப்பிரமணியம், 10இயக்க செல்லம், மூர்த்தி, பாலகுமார், ஜானகிராமன், ஜான் மொண்டோன்ஷா, ஈரோடு ஓவியர் வள்ளி நாராயணன், சந்திரன், செல்வராஜ் மற்றும் நுகர்வோர், விவசாயிகள், மாற்றுத்திறனாளிகள் நல சங்கங்களின் முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு பயனாளிகளை வாழ்த்தினர்.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து கிளென் மேக்ஸ்வெல் 'திடீர்' ஓய்வு!



புதுடெல்லி, நவ. 03–

ஆஸ்திரேலிய அணியின் நட்சத்திர வீரரும், உலகின் மிகச்சிறந்த ஆல்–ரவுண்டர்களில் ஒருவருமான கிளென் மேக்ஸ்வெல், தனித்துவமான கிரிக்கெட் ஷார்ட்களால் உலகம் முழுவதும் தனக்கென தனி ரசிகர் பட்டாளரை வைத்துள்ளார். பிக்–ஷோ என்று அழைக்கப்படும் மேக்ஸ்வெல், ஆஸ்திரேலிய அணிக்காக மட்டுமின்றி, இந்தியாவில் நடைபெறும் ஐபிஎல் தொடர் உள்ளிட்ட போட்டிகளில் விளையாடி பிரபலமானவர்.

கடந்த 2012–ஆம் ஆண்டு சார்ஜாவில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்காக ஒருநாள் மற்றும் டி20–ல் அறிமுகமான மேக்ஸ்வெல், 2013–இல் ஹைதராபாத்தில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார்.

38 வயதான மேக்ஸ்வெல், ஆஸ்திரேலியாவுக்காக மூன்று வடிவங்களிலும் 7 டெஸ்ட் போட்டிகள், 149 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் 130 டி20 சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ளார். ஒருநாள் போட்டிகளில் 3,990 ரன்களும், டி20ஐ போட்டிகளில் 2,897 ரன்களும் எடுத்த அவர், டெஸ்ட் கிரிக்கெட்டில் பெரிதளவில் சோபிக்காமல் 339 ரன்களும் எடுத்துள்ளார். கடந்த 2017ஆம் ஆண்டிற்குப் பிறகு அவருக்கு டெஸ்ட் அணியில் வாய்ப்பு கிடைக்கவில்லை. அதுமட்டுமின்றி, பந்து வீச்சாளராக அசத்திய மேக்ஸ்வெல், 136 விக்கெட்டுகளை கைப்பற்றி சிறந்த ஆல்ரவுண்டர்களில் ஒருவரானார்.

ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் ரன்கள் மற்றும் விக்கெட்டுகளை வாரிகுவித்த மேக்ஸ்வெல், 149 ஒருநாள் போட்டிகளில் விளையா 4 சதங்கள், 23 அரைசதங்கள் என 3,990 ரன்களை குவித்துள்ளார். இதில் 2023 ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில், 292 இலக்கை விரட்டிய ஆஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுகளை இழந்து 91 ரன்களில் தவித்துக்கொண்டிருந்த வேளையில் தொடையில் ஏற்பட்ட காயத்துடன் தனியாளாக 126 பந்துகளில் 201* ரன்கள் குவித்து வெற்றியைத் தேடித்தந்தார். பந்துவீச்சில் 77 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

டி20–களில் 5 சதங்கள் மற்றும் 12 அரைசதங்கள் என 2,897 ரன்களையும், பந்துவீச்சில் 51 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். ஆஸ்திரேலிய அணி கடந்த 2015, 2023 ஆகிய ஆண்டுகளில் ஒருநாள் உலகக்கோப்பையையும், 2021ஆம் ஆண்டில் டி20 உலகக்கோப்பையையும் வென்ற அணியில் முக்கிய அங்கம் வகித்தார். கடந்தாண்டு நடைபெற்ற 2025 சாம்பியன்ஸ் டிராபி தொடருடன் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றிருந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கு ஒட்டுமொத்தமாக முடிவுரை எழுதியிருக்கிறார் மேக்ஸ்வெல். சர்வதேச, உள்ளூர் போட்டிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ள அவர், பிக் பாஷ் லீக், ஐபிஎல் போன்ற டி20 லீக் தொடர்களில் தொடர்ந்து விளையாடுவதாகத் தெரிவித்துள்ளார்.ஓ

வேலை வாய்ப்பு

அணுசக்தித் துறையில் 254 ஆசிரியர் பணிகள்!



மத்திய அரசின் அணுசக்தி கல்விச் சங்கத்தில் (AEES) காலியாக உள்ள 254 ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது. தேர்வு செய்யப்படுபவர்கள் இந்தியா முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களில் பணியமர்த்தப்படுவர்.

அறிவிப்பு எண்: 01/2026
மொத்த காலியிடங்கள்: 254
பணிவகை: நிரந்தரப் பணி
விண்ணப்பம் தொடக்கம்: 02.11.2026, காலை 10 மணி
கடைசி நாள்: 22.11.2026, இரவு 11.50 மணி
விண்ணப்ப முறை: ஆன்லைன்
விண்ணப்பிக்க: AEES ஆன்லைன் விண்ணப்பம்
அதிகாரப்பூர்வ இணையதளம்: AEES இணையதளம்

கல்வித் தகுதி, வயது வரம்பு, தேர்வு முறை மற்றும் சம்பள விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்த்து விண்ணப்பிக்க வேண்டும்.



பழனி அருகே பழைய ஆயக்குடியில், பாண்டிய வேளாளர் சமுதாயத்தின் சார்பாக, தோப்படி கருப்பணசாமி கோவிலில் சிறப்பு அபிஷேகம் ஆராதனை விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பழனி வ உ சி மன்ற நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விஸ்வ இந்து பரிஷத் சார்பில் ரத்ததான முகாம்!



திருப்பூர், நவ. 03–

திருப்பூரில் விஎச்பி முன்னாள் அகில உலக செயல் தலைவர் வேதாந்தம் ஜி மறைவையொட்டி அவருக்கு விஸ்வ இந்து பரிஷத் தமிழ்நாடு சார்பாக அஞ்சலி செலுத்தப்பட்டது மேலும் வலிமை சேவை அமைப்பு மற்றும் விஸ்வ இந்து பரிஷத் சார்பாக போயம்பாளையம் ஸ்ரீ சரண் மருத்துவமனையில் 62 ஆவது ரத்ததான முகாம் நடைபெற்றது இதில் பொதுச் செயலாளர் சோமசுந்தரம் அவர்கள் கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்தார். ரத்ததானம் செய்தவர்களுக்கு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கப்பட்டது மாநில பொதுக்குழு உறுப்பினர் திருசெல்வம். மாநில இணை அமைப்பு செயலாளரும் மாவட்ட தலைவருமான பிரசன்னா ஆகியோர் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார்கள் இந்த நிகழ்வில் மண்டல அமைப்பாளர் சின்ன குமரவேல்.கோட்ட தலைவர் வழக்கறிஞர் சுதாகர். மாநகர் மாவட்ட துணை தலைவர் அன்பழகன். மற்றும் விஸ்வ இந்து பரிஷத் மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் வலிமை அமைப்பை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்....



இஸ்மாயில் லக்கி
டூராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



இன்றைய கார்ட்டூன்



தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கோவை வருகை!

சென்னை, நவ. 03–

சட்டசபை தேர்தலுக்கு பின் மு.க.ஸ்டாலின் முதன்முறையாக கோவை வருகை தர உள்ளதால் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்க தி.மு.க.வினர் முடிவு செய்துள்ளனர்.

கோவை காந்திபுரத்தில் ரூ.300 கோடி செலவில் பிரமாண்ட பெரியார் அறிவுலகம் கட்டப்பட்டு உள்ளது. இந்த நூலகம் பொதுமக்கள் மற்றும் மாணவ–மாணவிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இதன் திறப்பு விழா சமீபத்தில் நடந்தது.

பெரியார் அறிவுலகம் கடந்த தி.மு.க. ஆட்சியில் கட்டத் தொடங்கப்பட்டது. முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அந்த நூலகத்துக்கு பெரியார் அறிவுலகம் என்ற பெயரையும் சூட்டினார். பணிகள் முழுவதும் முடிவு பெறாததால் அப்போது நூலகம் திறக்கப்படவில்லை.

சமூக வலைத்தளங்களில் பரவும் தவறான தகவல், வதந்திகளால் மன உளைச்சல்– செஞ்சி சிறுமியின் தாய் கண்ணீர் மல்க பேட்டி

இந்தநிலையில் கோவைக்கு



பிரமாண்ட நூலகம் தந்ததுடன், அதற்கு பெரியார் பெயர் வைத்ததற்காக திராவிடர் கழகம் சார்பில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு நாளை (4–ந் தேதி) பாராட்டு விழா நடத்தப்பட உள்ளது. கோவை வ.உ.சி. மைதானத்தில் மாலை 5 மணிக்கு நடக்கும் பாராட்டு விழாவில் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார்.

இதற்காக மு.க.ஸ்டாலின் நாளை காலை 9.30 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு கோவை விமான நிலையம் வருகிறார். அங்கு அவருக்கு தி.மு.க.வினர் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது. தொடர்ந்து அவர் நீலாம்பூர் செல்கிறார். அங்கு ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. அலுவலகம் கட்டுவதற்கான கட்டுமான பணிக்கு அடிக்கல் நாட்டுகிறார். பின்னர் தனியார் ஓட்டலில் சிறிது நேரம் ஓய்வெடுக்கிறார்.

அதன்பின் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகிறார். இரவு 8.30 மணிக்கு அவர் விமானம் மூலம் சென்னை புறப்பட்டுச் செல்கிறார்.

பாராட்டு விழாவை ஒட்டி கோவை வ.உ.சி. மைதானத்தில் பிரமாண்ட மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. கோவை அவினாசி சாலையின் இருபுறமும் தி.மு.க. மற்றும் திராவிடர் கழக கொடிகள் கட்டப்பட்டுள்ளது.

சட்டசபை தேர்தலுக்கு பின் மு.க.ஸ்டாலின் முதன்முறையாக கோவை வருகை தர உள்ளதால் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்க தி.மு.க.வினர் முடிவு செய்துள்ளனர். இதனால் பாராட்டு விழாவில் ஆயிரக்கணக்கான தி.மு.க.வினர் பங்கேற்று மு.க.ஸ்டாலினுக்கு வரவேற்பு அளிக்க உள்ளனர்.

லஞ்சம்; கைது 18; பறிமுதல் ரூ.1.59 கோடி!

சென்னை, நவ. 03–

தமிழகம் முழுவதும் லஞ்ச ஒழிப்பு போலீசாரின் அதிரடி நடவடிக்கையில், லஞ்சம் வாங்கிய அதிகாரிகள் தினமும் ஆங்காங்கே கைது செய்யப்படுகிறார்கள். லஞ்சப்பணமும் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த அக்டோபர் மாதம் லஞ்சஒழிப்பு போலீசார் நடத்திய அதிரடி வேட்டையில், லஞ்சம் வாங்கியதாக 18 அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர்.



கிராம நிர்வாக அதிகாரி, கிராம உதவியாளர், வணிக ஆய்வாளர், சுகாதார அதிகாரி, வருவாய் ஆய்வாளர், பில் கலெக்டர், கூடுதல் மாவட்ட தீய ணைப்பு அதிகாரி, இளநிலை என்ஜினீயர்கள் என அரசு அதிகாரிகளும், ஊழியர்களும் லஞ்ச ஒழிப்பு போலீசாரின் கைது நடவடிக்கையில் சிக்கியுள்ளனர்.

கடந்த ஒரு மாதத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடத்திய சோதனையில், கணக்கில் வராத 'ஜி–பே' பரிவர்த்தனை உள்ளிட்ட ரூ.1 கோடியே 59 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டதாக லஞ்ச ஒழிப்பு போலீசார் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 4 ஊழல் வழக்குகளில் அரசு ஊழியர்களுக்கு சிறைத் தண்டனையும் கோர்ட்டு வழங்கியுள்ளது. 2 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகள் வரை சிறை தண்டனை வழங்கி கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

ஆந்திரா, புதுவை: வெளுத்து வாங்கும் மழை!

புதுடெல்லி, நவ. 03–

முரசு புயலால் ஆந்திரா, புதுச்சேரியில் மழை வெளுத்து வாங்குகிறது.

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள முரசு புயல் தீவிர புயலாக நேற்று வலுப்பெற்றது. இந்த புயல் இன்று அதிகாலை 4 மணிக்குள் தெற்கு ஆந்திராவை ஒட்டிய பகுதிகளில் கரையை கடக்கும் என்று வானிலை மையம் இயக்குநர் துரை தெரிவித்துள்ளார்.

புயல் கரையை கடக்கும்போது சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. அப்போது மணிக்கு 100 முதல் 120 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் மணிக்கு 80 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசும் என்றும் எச்சரித்துள்ளார்.

எனினும், அர்னாப் புயல் கரையை கடந்தபோது ஏற்பட்ட பாதிப்புகளைப்போல முரசு புயலால் பாதிப்பு இருக்காது என்றும் தெரிவித்துள்ளார். புயல் கரையை கடக்கும்போது மணிக்கு 100 முதல் 110 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 120 கி.மீ. வேகத்திலும் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.



முரசு புயல் பாதிப்புகள் மற்றும் மின் விநியோக சீரமைப்பு பணிகளுக்கு உதவ தமிழக அரசு சார்பில் ஆந்திராவுக்கு 500 மின்வாரிய பணியாளர்களை அனுப்பிவைத்துள்ளது.

சென்னை, கடலூர், நாகை, எண்ணூர், காட்டுப்பள்ளி உள்ளிட்ட துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காலை 3.30 மணியளவில், முரசு புயலை முன்னிட்டு ஆந்திர பிரதேசத்தின் ஓங்கோல் நகரில் கனமழை பெய்தது. ஓங்கோல் கடலோர பகுதிகளில் பலத்த காற்றும் வீசி வருகிறது. ஆந்திராவின் சிராலா பகுதியில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. கடலோர பகுதிகளில், கடல் அலைகள் சீற்றத்துடன் காணப்பட்டன.

புதுச்சேரியில் நள்ளிரவில் இருந்து தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், வட தமிழகம் மற்றும் புதுச்சேரியில் தொடர் மழைப்பொழிவு காணப்படுகிறது. முரசு புயல் அதிதீவிர சூறாவளி புயலாக உருமாறி, ஆந்திர பிரதேசத்தின் ஓங்கோல் அருகே, நெல்லூர் மற்றும் நரசப்பூர் இடையே கரையை கடக்கும் என இந்திய வானிலை ஆய்வுமையம் கணித்துள்ளது.

தீபாவளிக்கு மறுநாளும் ரேஷன் கடை பணியாளர்களுக்கு விடுமுறை!

சென்னை, நவ. 03–

தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை ஆகியவற்றுக்கான தொடர் விடுமுறை காரணமாக, பொது வினியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்கள், ரேஷன் அட்டைதாரர்களை சென்றடைவதை உறுதி செய்வதற்காக 18.10.2026 அன்று



அனைத்து ரேஷன் கடைகளுக்கும் வேலை நாளாக அறிவிக்கப்பட்டது.

அதை ஈடுசெய்யும் விதமாக 21.11.2026 அன்று விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் தீபாவளி பண்டிகை தினமான 8–ந்தேதிக்கு (ஞாயிற்றுக்கிழமை) அடுத்த நாளான 9–ந்தேதியை விடுமுறை நாளாக, அதாவது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்ட 21.11.2026 தேதிக்கு மாற்றாக அறிவிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ரேஷன் கடை பணியாளர்கள் சங்கம் கோரியுள்ளது.

அந்த கோரிக்கையை ஏற்று, வரும் 9–ந்தேதியை விடுமுறை நாளாகவும், 21–ந்தேதியை பணி நாளாகவும் அறிவித்து உத்தரவிடப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.


கட்சி வளர்ச்சி பணி: தி.மு.க மறுசீரமைப்பு குழுவுடன் மு.க.ஸ்டாலின் ஆலோசனை!

சென்னை, நவ. 03–

தமிழகத்தில் கடந்த மே மாதம் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. ஆட்சி அதிகாரத்தை இழந்தது. முதல்–அமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் பலரும் வெற்றிவாய்ப்பை இழந்தனர்.

இதைத்தொடர்ந்து தி.மு.க.வில் அதிரடி மாற்றங்களை மேற்கொள்ளும் வகையில் முன்னாள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, சக்கரபாணி, கீதா ஜீவன் உள்பட 10 நிர்வாகிகள் அடங்கிய மறுசீரமைப்பு குழுவை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் நியமித்தார்.

இந்த குழுவினர் ஆய்வு மேற்கொண்டு பரிந்துரைகளை மு.க.ஸ்டாலினிடம் கடந்த ஆகஸ்டு மாதம் சமர்ப்பித்தனர்.



இந்த குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில்தான் தி.மு.க.வில் மாவட்ட செயலாளர்களுக்கு வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டது.

தி.மு.க. அமைப்புரீதியான மாவட்டங்கள் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டது. தி.மு.க.வில் அமைப்புரீதியாக 25 அணிகள் இயங்கி வருகிறது. இந்த சார்பு அணிகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து மறுசீரமைப்பு குழுவினர் ஆலோசனை கூட்டங்களை நடத்தி அறிவுரைகளை வழங்கி வருகின்றனர். அந்த வகையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. சிறுபான்மை நலப்பிரிவு அணி, வர்த்தகர் அணி நிர்வாகிகளுடன் நேற்று ஆலோனை நடைபெற்றது. இந்த கூட்டத்தில், கட்சி வளர்ச்சி பணிகள் குறித்தும், நிர்வாகிகள் செயல்பாடுகள் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த குழுவினர் மு.க.ஸ்டாலினை சந்தித்து, இந்த கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட விவரங்கள் குறித்து தகவல் தெரிவித்தனர். அப்போது மு.க.ஸ்டாலின், இந்த குழுவினருக்கு சில ஆலோசனைகளை வழங்கியதாக கூறப்படுகிறது.

மத்திய அரசின் புதிய விமான விதிகள் - 2027-இல் அமலுக்கு வரும் என அறிவிப்பு!

புதுடெல்லி, நவ. 03–

விமான நிறுவனங்கள் பயணிகளுக்கு டிக்கெட் முன்பதிவு செய்யும் போது, ரத்து கட்டணம் உள்ளிட்ட பல்வேறு கட்டணங்களின் விரிவான விவரங்களை வழங்க வேண்டும் என்று புதிய விமான விதிகளை அரசு அறிவித்துள்ளது.

அக்டோபர் 31 அன்று அறிவிக்கப்பட்ட 'பாரதிய வாயுயான் நியமம், 2026'–இன் கீழ், ஏதேனும் ஒரு "அசாதாரண சூழல்" ஏற்படும் பட்சத்தில், விமான கட்டணங்கள் தொடர்பாக விமான போக்கு வரத்து அமைச்சகம் தலையிட முடியும். இருப்பினும், 'அசாதாரண சூழல்' என்பது எதை குறிக்கும் என்பதற்கான தெளிவான விளக்கங்கள் இதில் குறிப்பிடப்படவில்லை. இந்த விதிகள், 90 ஆண்டுகள் பழமையான 'விமான சட்டம், 1934'–க்கு மாற்றாகக் கொண்டு வரப்பட்ட 'பாரதிய வாயுயான் விதேயக், 2024'–இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன.



விரிவான விவரங்கள்:

புதிய விதிகளின்படி, விமான நிறுவனங்கள் தங்கள் முன்பதிவு இணையதளத்திலும், பயணிகளுக்கு வழங்கப்படும் டிக்கெட்டிலும், விமான கட்டணம் மற்றும் அது தொடர்பான இதர கட்டணங்களின் விரிவான விவரங்களை காட்ட வேண்டும்.

இந்த விவரங்களில், "மொத்த தொகை, விமான கட்டணம், வரிகள், இதர கட்டணங்கள், ரத்து செய்வதற்கான கட்டணங்கள், பணத்தை திரும்ப பெறுவதற்கான நிபந்தனைகள் அல்லது வேறு ஏதேனும் கட்டணங்கள் இருந்தால், அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக" குறிப்பிட வேண்டும். விமான நிறுவனங்கள் நிர்ணயிக்கும் கட்டணங்கள், விமான போக்குவரத்து இயக்குநரகத்தால் (DGCA) கண்காணிக்கப்படும்.

"ஏதேனும் ஒரு அசாதாரண சூழல் ஏற்பட்டுள்ளதாக மத்திய அரசு கருதினால், பொது நலன் கருதி, எழுத்துப்பூர்வமான உத்தரவு மூலம் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கலாம்" என்று அந்த விதிகள் தெரிவிக்கின்றன.

2027 ஜனவரி 1 முதல் அமலுக்கு வரவுள்ள இந்த விதிகள், தற்போது நடைமுறையில் உள்ள 'விமான விதிகள், 1937'–க்கு மாற்றாக அமையும்.

தற்போதைய விதிகளுடன் ஒப்பிடுகையில், புதிய விதிகளில் செய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட மாற்றங்கள் என்ன என்பது குறித்து உடனடியாக தெரியவரவில்லை.

விரைவு ரெயில்கள் வேகம் அதிகரிக்கும்; புதிய கால அட்டவணை ஜனவரியில் அமல்!

சென்னை, நவ. 03–

விரைவு ரெயில்களுக்கான புதிய கால அட்டவணை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் அமலாகும். சில விரைவு ரெயில்களின் வேகம் அதிகரிக்கும் என்பதால், 30 நிமிடங்கள் வரை பயண நேரம் குறையும் என தெற்கு ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தெற்கு ரெயில்வேயில் ஆண்டுதோறும் ரெயில்களுக்கான புதிய கால அட்டவணை டிசம்பரில் வெளியிடப்பட்டு வருகிறது. அதன்படி 2027–ம் ஆண்டுக்கான விரைவு, பயணியர் ரெயில்களின் புதிய கால அட்டவணை தயாரிக்கும் பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. இதுகுறித்து தெற்கு ரெயில்வே அதிகாரிகள் கூறியதாவது:

ரெயில்களின் சேவையை



மேம்படுத்துவதிலும், ரெயில்களை தாமதம் இன்றி இயக்குவதிலும் கவனம் செலுத்தி வருகிறோம். ரெயில்கள் இயக்கத்தில் தாமதத்தை குறைக்கும் வகையிலும், விரைவு ரெயில்களின் வேகத்தை அதிகரிக்கும் வகையிலும், பல்வேறு வழித்தடங்களில் ரெயில் பாதைகள் மேம்படுத்தப்பட்டு உள்ளன. மாவட்ட வாரியாக முடிந்துள்ள பணிகள் குறித்து அறிக்கைகளை பெற்றுள்ளோம். தெற்கு ரெயில்வேயில் மின்மயமாக்கும் பணி 98 சதவீதம் முடிந்துள்ளன.

புதிய ரெயில்கள், கூடுதல் ரெயில்கள் இயக்கம், கூடுதல் நிறுத்தம் குறித்து ஏற்கனவே வந்த மனுக்களை பரிசீலனை செய்து வருகிறோம். ரெயில்வே அதிகாரிகள் ஆய்வு செய்து, வாரியத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வருகிறோம். வரும் ஆண்டு ரெயில் கால அட்டவணை தயாரிப்பு பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. அடுத்த மாதம் இறுதியில் அறிவிப்பு வெளியிட்டு, ஜனவரியில் அமலாகும். முக்கிய வழித் தடங்களில் விரைவு ரெயில்களின் வேகம் அதிகரிக்கப்படும். பயண நேரம் குறைந்தபட்சம் 30 நிமிடங்கள் வரை குறைக்கும் வகையில் இருக்கும். இதற்கான அட்டவணை வெளியிடப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

செவ்வாய் கிரகத்தை போன்ற செயற்கை வாழ்விடத்தில் 4 விண்வெளி வீரர்கள்.. 378 நாட்கள்.. சோதனை வெற்றி பெற்றதா.?

நியூயார்க், நவ. 03–

நாசா வரும் 2030–ம் ஆண்டுக்குள் மனிதர்களை நேரடியாகச் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பும் திட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

நமது சூரியக்குடும்பத்தில் 4–வது கோளாக இருப்பது செவ்வாய் கிரகம் ஆகும். பூமிக்கு அடுத்தபடியாக மனிதர்கள் வாழத் தகுதியான ஒரு கோள் செவ்வாய் கிரகம் தான் என்பது விண்வெளி ஆராய்ச்சியாளர்களின் நீண்ட கால நம்பிக்கையாகும். இதனால், அங்கு ரோபோக்களை அனுப்பி ஆய்வு செய்து வரும் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா வரும் 2030–ம் ஆண்டுக்குள் மனிதர்களை நேரடியாகச் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பும் திட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

பூமியில் இருந்து பல கோடி கி.மீ தொலைவில் உள்ள செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்கள் சென்றால், அங்குள்ள கடுமையான சூழலை எப்படி எதிர்கொள்வார்கள், அவர்களின் உடல் மற்றும் மனநிலை எப்படி இருக்கும்



என்பதை முன்கூட்டியே சோதித்துப் பார்ப்பது மிக அவசியமான ஒன்றாகும். இதற்காக, நாசா தனது டெக்சாஸ் மையத்தில் 3டி பிரிண்டிங் தொழில்நுட்பம் மூலம் 1,700 சதுர அடியில் செவ்வாய் கிரகத்தைப் போன்றே ஒரு செயற்கை வாழ்விடத்தை உருவாக்கியது.

கடந்த ஆண்டு அக்டோபர் 19–ந் தேதி ஜேம்ஸ் ஸ்பைசர், ராஸ் எல்டர், எல்லென் எல்லிஸ், மேத்யூ மாண்ட்கோமரி ஆகிய 4 நாசா விஞ்ஞானிகள், வெளி உலகத்துடனான அனைத்து தொடர்புகளையும் துண்டித்துக்கொண்டு, தங்களின் சுய விருப்பத்தின் பேரில் இந்தச் செயற்கை செவ்வாய் கிரகத்திற்குள் நுழைந்தனர். அங்கு மிகக் கடினமான பயிற்சிகளை அவர்கள் மேற்கொண்டனர்.

செவ்வாய் கிரகத்தின் மண்ணைப் போன்ற அமைப்பில் பயிர்களை விளைவிப்பது, விண்வெளியில் ஏற்படும் தகவல் தொடர்பு தாமதங்களைச் சமாளித்தியமாக கையாளுவது போன்ற சோதனைகளை மேற்கொண்டனர். மேலும், மிகக் குறைந்த அளவிலான தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்களைக் கொண்டு அந்த சூழலுக்கு ஏற்ப அவர்கள் வாழப் பழகினர்

இந்நிலையில், 378 நாட்கள் கடின வாழ்க்கை முறை மற்றும் பயிற்சிகளை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு அந்த 4 வீரர்களும் நேற்று பாதுகாப்பாக வெளி உலகத்துக்கு வந்தனர். அவர்களை நாசா அதிகாரிகள் மலர்க்கொத்து கொடுத்து உற்சாகமாக வரவேற்றனர். செயற்கையாக உருவாக்கப்பட்ட செவ்வாய் கிரகம் போன்ற வாழ்விடத்தில் 4 விண்வெளி வீரர்கள் 378 நாட்கள் வெற்றிகரமாக தங்கியிருந்து, திரும்பி இருப்பது விண்வெளி ஆராய்ச்சியின் முக்கிய நிகழ்வாக பார்க்கப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020